**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.**

**O.S. 24/2021**

**Date:27.10.2022**

**பெயர் சுரேந்திரன்** பி.வா.சா.2 அனுமதி பேரில் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் விழுப்புரம் மாவட்ட செய்தி தொடர்பாளாராக பணியாற்றி வருகிறேன். பிரதிவாதி அழைத்ததின் பேரில் சாட்சி சொல்ல வந்தேன். வழக்கின் வாதி பெயர் சிவக்குமார். பிரதிவாதி எனது நெருங்கிய நண்பர் என்றால் வாதி, பிரதிவாதி இருவருமே எனக்கு தெரிந்தவர்கள். நான் ஒப்பந்த தொழில் எதுவும் செய்யவில்லை. நான் பிரதிவாதியிடம் கடன் எதுவும் பெறவில்லை. வாதி எதற்காக வழக்கு போட்டுள்ளார் என்றால் பணத்தை வசூலிக்க கேட்டு வாதி வழக்கு போட்டுள்ளார். பிரதிவாதி எத்தனை வருடமாக ஒப்பந்த வேலைகள் செய்கிறார் என்றால் சுமார் 20 ஆண்டுகளாக ஒப்பந்த வேலைகள் செய்கிறார். வாதியும் அவ்வாறே 20 ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பந்த வேலை செய்கிறார். எப்போது முதல் பிரதிவாதிக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது என்றால் கடந்த 7 ஆண்டுகளாக உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிக்கு டிப்பரசன் நோய் ஏற்பட்டது. வாதி, பிரதிவாதிகளிடையே என்ன பிரச்சனை என்றால் வாதியும், பிரதிவாதியும் சேர்ந்து ஒப்பந்த தொழில் செய்தார்கள். இடையே பிரதிவாதிக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டதால் அவருக்காக வாதி அந்த பணிகளை பார்த்து வந்தார். அந்த வகையில் வாதி, பிரதிவாதிக்கு 80 லட்சம் வரை பணம் கொடுக்க வேண்டியதாக பிரதிவாதி எங்களிடம் சொன்னார். அதனால் இருதரப்பையும் அழைத்து நாங்கள் பேசினோம். 3 வருட காலகட்டத்தில் அவ்வளவு தொகை கொடுக்க வேண்டியது இருந்ததாக சொன்னார்கள். எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை அவ்வளவு தொகை கடன் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த காலகட்டத்தில் ஒப்பந்த தொழிலுக்கான ஒர்க் ஆர்டர் யார் பெயரில் எடுக்கப்பட்டது என்றால் பிரதிவாதி பெயரில்தான் எடுக்கப்பட்டது. ஒர்க் ஆர்டர் எதையும் பிரதிவாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. பிரதிவாதி குறிப்பிட்ட காலகட்டத்தில் பிரதிவாதி பெயரில் எந்த வேலையும் எடுத்து செய்யவில்லை என்றும், நான் பிரதிவாதிக்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் ஒர்க் ஆர்டர் எடுத்திருந்தால் அதற்கான சான்றுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதிகளுக்கிடையே ஏற்பட்ட பிரச்சனை பற்றி பேச யார் முதலில் என்னை அழைத்தார் என்றால் பிரதிவாதி அழைத்தார். எந்த தேதியில் அழைத்தார் என்றால் 2020 ஜனவரியில் அழைத்தார். முதலில் வாதியிடம் தொலைபேசியில்தான் பிரதிவாதி சொன்ன பிரச்சனை குறித்து பேசினேன். பிறகு வாதி தரப்பில் அவருக்கு தெரிந்தவர்களை அனுப்பினார். அவர்களுடனும் பேசினோம்.

கடைசியாகத்தான் வாதியை நேரில் சந்தித்து பிரதிவாதி சார்பில் நான் பேசினேன். கடைசியாக விழுப்புரத்தில் உள்ள தாட்கோ அலுவலக வளாகத்தில் வைத்து வாதியிடம் பேசினேன். எந்த தேதியில் கடைசியாக பேசினேன் என்றால் 18.01.2020. நானும், வாதியும் பேசும்போது சக்திவேல், சுருளிராஜ், சம்பத்குமார் ஆகியோரும் இருந்தார்கள். பிரச்சனையை சுமூகமாக முடியுங்கள் என்று வாதியிடம் சொன்னேன். பிரச்சனையை தான் முடித்துவிடுவதாக என்னிடம் சொன்னார். அதுதான் அன்று நடந்தது. அன்றைய தினமே நாங்கள் பேசி முடித்ததை ஒரு ஆவணமாக தயார் செய்தோம். என்ன ஆவணமாக தயார் செய்தோம் என்றால் உடன்படிக்கை பத்திரம் தயார் செய்தோம். அதற்கான முத்திரை தாள் யார் வாங்கி வந்தார் என்று எனக்கு தெரியவில்லை. எவ்வளவு ரூபாய் முத்திரைதாளில் உடன்படிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் ரூ. 100/-. முத்திரை வாதி பெயரில் வாங்கப்பட்டது. யார் யார் எங்கு கையொப்பம் போட்டார்கள் என்றால் வாதி, பிரதிவாதி இருவரும் கையொப்பம் போட்டார்கள். சாட்சியாக கீர்த்தனா, சக்திவேல், மற்றும் நானும் கையொப்பம் போட்டோம். வாதி, பிரதிவாதிகள் தலா 2 கையொப்பம் போட்டார்கள். ஒப்பந்த பத்திரம் 2 பக்கங்களை கொண்டது. ஒப்பந்த பத்திரத்தில் சாட்சி எந்த பக்கத்தில் கையொப்பம் போட்டார் என்றால் 2 வது பக்கத்தில் இடது பக்கம் கையொப்பம் போட்டோம். ஒப்பந்த பத்திரத்தை யார் தயார் செய்தார் என்றால் நாங்கள் பேசியபடி வாதிதான் தயார் செய்து கொண்டுவந்தார். எங்கு டைப் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. முதலாவது சாட்சியாக கீர்த்தனா கையொப்பம் போட்டார். 2 வது சாட்சியாக சக்திவேல் கையொப்பம் போட்டுள்ளார். கீர்த்தனா பிரதிவாதியின் மகள் என்றால் சரிதான். 3 வது சாட்சியான் நான் கையொப்பம் போட்டேன். ஒப்பந்த பத்திரத்தை யார் டைப் செய்து தயார் செய்தார் என்று அந்த ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1ன் அசல் வாதியிடம் உள்ளது. எந்த உடன்படிக்கையும் தாட்கோ அலுவலகத்தில் ஏற்படவில்லை என்றும், நானும், கீர்த்தனாவும், சக்திவேலும், பிரதிவாதியும் சேர்ந்து ஆவணத்தை தயார் செய்து வாதியின் கையொப்பத்தை ஜோடனையாக அதில் போட்டு ஆவணம் உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் உடன்படிக்கை ஏற்பட்டிருந்தால் அசல் ஆவணம் பிரதிவாதியின் வசம்தான் இருந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தினமே வாதி காசோலை கொடுத்துவிட்டதால் அசல் ஆவணத்தை வாதி தன் வசம் வைத்துக்கொண்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.